ஸ்ரீதணிகை
திருக்கணித வானவியல் பஞ்சாங்கம்

| www.thanigaipanchangam.com | www.prohithar.com |

# முழு சந்திர கிரஹணம்

## 8.10.2014 புதன் (ஸ்ரீஜய, புரட்டாசி 22)

**✱ஆரம்பம்: பகல் 1:44 ✱ உச்சம்: மாலை 4:25 ✱முடிவு: இரவு 7:05**

வானவியல் பார்வை...

8.10.2014 புதன் கிழமை அன்று பகலில் இந்திய நேரப்படி 1:44 மணிக்கு புறநிழல்(Penumbral) சந்திரகிரஹணம் துவங்கி, பகல் 2:44 மணி அளவில் நிஜநிழல்(Umbral) சந்திர கிரகணமாக பிரவேஸிக்கிறது. சந்திரகிரகணம் உச்சகட்டமாக மாலை 4:25க்கு அடைகிறது.

அன்று சென்னையில் சூரிய அஸ்தமனத்திற்கு பின்னர் சுமார் 10 நிமிடங்கள் மட்டுமே அதாகில் மாலை 6:04 வரை மட்டுமே நிஜ நிழல் கிரகணம் தெரியும், பின்னர் புறநிழல் கிரகணம் இரவு 7:05 வரை தெரியும் (சுமார் 1 மணி 11 நிமிடங்கள்). கிரகண பரிமாணம் 1.172. சென்னையில் சந்திர உதயம் மாலை 5:54மணி.

சூரியமறைவின் பொழுது அடிவானில் மேகமூட்டம், வளிமண்டல ஒளிச்சிதைவு, ஈரப்பதன் காரணமாக **“நிஜநிழல்”** கிரஹணத்தினை காண்பது அரிதாகும், ஆயினும் **“புறநிழல்”** கிரகணத்தை காணலாம் (சந்திரனின் ஒளி சற்று மங்கலாக இருக்கும்). இதை வெறும் கண்களால் கிழக்கு திசையில் காணலாம்.

ஜோதிட பார்வையில்...

பூர்ண சந்திர கிரஹணம்(கேது கிரஸ்த) தூம்ர வர்ணம். பகலில்(சூரிய மறைவுக்கு முன்) தோன்றும் சந்திர கிரகணத்திற்கு தோஷமில்லை, எனவே கிரஹண தோஷம் சூரிய அஸ்தமனத்திலிருந்து கிரஹண முடிவு (இரவு 7:05) வரை சுமார் 70 நிமிடங்கள் மட்டுமே உள்ளது.

**ஆகாய பார்வை திசை :** தென் மேற்கில் (நிருதி) துவங்கி வடகிழக்கில்(ஈசான்யம்) முடிவு.
**பரிகார நட்சத்திரங்கள் :** உத்திரட்டாதி, ரேவதி, அஸ்வினி, ஆயில்யம், கேட்டை
**பரிகார தானம் :** மேற்படி நட்சத்திரத்தினர் ஆதரவற்றோர் இல்லத்திற்கு அரிசி தானம் செய்தல் நன்று.

**பாலு சரவண சர்மா - பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர், ஜோதிடர், பஞ்சாங்க கணிதர்**
தொடர்பு: 98403 69677 மின்னஞ்சல் : prohithar@gmail.com